DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.11

Name : **திரு.கருப்பையா** Caste:

Father’s Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

3-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது உத்தமபாளையம் தாலுகா, எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உத்தமபாளையம் தெற்கு கிராமத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 17.11.2024 ஆம் தேதியன்று மாலை சுமார் 06.30 மணியளவில் உத்தமபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கொலை வழக்கு சம்பந்தமாக எதிரி சதாம் உசேன் என்பவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்காக என்னையும், கிராம உதவியாளரையும் உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள்.

2. நான் மாலை 6.00 மணிக்கு உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு சதாம் உசேன் அவர்கள் இருந்தார். அவர் தான் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 1-ம் எதிரி. எங்கள் முன்னிலையிலும், கிராம உதவியாளர் முன்னிலையிலும் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரும் கையெழுத்து போட்டார். நானும், மணிகண்டனும் கையெழுத்து போட்டோம். பின்னர் சம்பவத்தில்

பயன்படுத்திய கத்தி கார்த்திக் நம்பியார் ஒர்க்ஷாப்பிற்கு கிழக்கு பக்கம் உள்ள புதரில் போட்டு வைத்திருப்பதாக தெரிவித்தார். 08.30 மணி அளவில் ஆய்வாளர் அவர்கள் வாகனத்தில் செல்ல, நானும் கிராம உதவியாளரும் பின்னால் பைக்கில் சென்றோம்.

3. கம்பம் – கோம்பை ரோட்டில் பைபாஸ் பிரிவு அருகில் உள்ள கார்த்திக் நம்பியார் லாரி ஒர்க்ஷாப் அருகில் உள்ள கிழக்கு பக்கம் புதரில் சதாம் உசேன் அடையாளம் காட்டி எடுத்து கத்தி எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். கைப்பிடி பித்தளை பூணால் போடப்பட்ட கத்தி எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது, அது ரத்தக்கறை படிந்த கத்தி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சதாம் உசேன் கையெழுத்து போட்டார், நாங்கள் கையெழுத்து போட்டோம். அதன் பிறகு கைப்பற்றுதல் மகஜரில் எங்கள் முன்னிலையில் கையெழுத்து பெறப்பட்டது.. மறுநாள் காலையில் 18.11.2024 ஆம் தேதியன்று சுமார் 8.00 மணியளவில் மீண்டும் காவல் ஆய்வாளர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு எதிரியான ஈஸ்வரி அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்க வேண்டியுள்ளது என்றும், என்னையும், கிராம உதவியாளரையும் வரச்சொன்னதன் பேரில் நாங்கள் உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு சென்றோம்.

4 எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் ஈஸ்வரி அவர்களை விசாரணை செய்தார் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஈஸ்வரி அவர்கள் கையெழுத்து போட்டார், நாங்களும் சாட்சி கையெழுத்து போட்டோம். சதாம் உசேன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கத்தி சா.பொ.8 ஈஸ்வரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள அவரது கையெழுத்து மற்றும் எங்களது கையெழுத்துக்கள் அ.சா.ஆ.10. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஒப்புதல் பெற்று நான் விசாரிக்க செல்லவில்லை என்றால் போனில் அழைத்ததன் பேரில் நான்

சென்றேன். போனில் என்னை காவல் ஆய்வாளர் அழைத்தார், அவரது கைபேசி எண் எனக்கு தெரியுமா என்றால் அவர் காவல் ஆய்வாளர் என்று என்னிடம் அறிமுகம் செய்து கொண்டு பேசியதன் பெயரில் அவர் அழைத்ததின் பெயரில் நான் சென்றேன்.

2. கொலை வழக்கில் எனது உயர் அதிகாரிகளின் அனுமதி பெறாமலும், எழுத்துப்பூர்வமாக எந்த ஒப்புதலும் பெறாமலும் செல்வது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. மேனுவல் டைரியில் இது சம்பந்தமாக குறிப்பு எழுதி விட்டு நான் சென்றேன் என்றால் அவ்வாறு குறிப்பு ஏதும் எழுதவில்லை ஒரு அரசு அதிகாரியாக இருக்கும் பட்சத்தில் எங்கு செல்கிறேன் எதற்காக செல்கிறேன் என்ற விபரத்தை மேனுவல் டைரியில் குறித்து வைப்போம் என்றால் வருவாய் ஆய்வாளரிடம் இது சம்பந்தமாக தகவல் மட்டும் சொன்னேன். எழுத்து பூர்வமாக கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. காவல் நிலையத்திற்கு மாலை 06.30 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்தில் இரவு 08.00 மணி வரை இருந்தேன். சுமார் 1 ½ மணிநேரம் ஒப்புதல் வாக்குமூலம் தரப்பட்டது. எத்தனை பக்கங்கள் ஒப்புதல் வாக்குமூலம் எழுதப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் சுமார் ஆறு பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டது. தட்டச்சு செய்தவர்கள் யாரேனும் கையெழுத்து போட்டார்களா என்றால் அவர்கள் யாரும் கையெழுத்து போடவில்லை. நான் கடைசி பக்கத்தை மட்டும் கையெழுத்து போட்டேன் மற்ற பக்கங்களில் போடவில்லை. பொதுவாக கிராம நிர்வாக அலுவலர் முத்திரை பதித்து தான் கையெழுத்து போடுவோம் என்றால் அன்றைய தினம் வி.ஏ.ஓ. என்று எழுதி கையெழுத்து போட்டு உள்ளேன்.

4. போலீசார் கொடுத்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த ஆவணம் எழுதவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் இருட்டிய புதர் மண்டிய பகுதி என்றால் கைப்பற்றிய இடம் புதர் அளவாக இருக்கக்கூடிய இடம், இருட்டு பகுதி என்றால் சரிதான். போலீசார்

டார்ச் லைட் ஏதேனும் எடுத்து வந்தார்களா என்றால் ஜீப் லைட் வெளிச்சம் மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தார்கள் புதர் மண்டிய இடத்தில் அவ்வாறு எதுவும் தேடி எடுக்க முடியாது என்றால் சரியல்ல.

5. போலீசார் என்னுடன் கைரேகை நிபுணர்கள் யாரையும் அழைத்துச் செல்லவில்லை. மோப்பநாயையும் அழைத்துச் செல்லவில்லை. நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும், உண்மையிலேயே சென்று இருந்தால் போலீசார் அழைத்துச் சென்று இருப்பார்கள் என்றால் சரியல்ல. கத்தி எந்த திசையில் இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி அடையாளம் காட்டி அந்த கத்தி போலீசார் கைப்பற்றினார்கள். நேரடியாக நாங்கள் எடுக்கவில்லை எதிரி தான் அந்த கத்தியை எடுத்த ஆஜர் செய்தார்.

6. அந்த கொட்டகையை ஒட்டி ஆட்கள் இருப்பார்கள் என்றால் நாங்கள் கைப்பற்றும்போது ஆட்கள் யாரும் இல்லை. கைப்பற்றி இடம் பைபாஸ் சாலை என்றால் அங்கு அதிகமாக ஆட்கள் இருப்பார்கள் என்றால் வாகன போக்குவரத்து இருக்கும். கைப்பற்றிய இடத்திற்கு எதிரில் ரத்தினம் என்பவர் கடை மற்றும் வீடு உள்ளது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

7. நான் சொன்ன இடம் ஆட்கள் நிறைய இருக்கும் இடம் என்றும் உண்மையிலேயே சென்று இருந்தால் அவர்களிடம் கையெழுத்து பெற்று இருப்பார்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சதாம் உசேன் சொல்ல, சொல்ல ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருக்கு எதிராக வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என்ற காரணம் சொல்லி அது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

8. காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து பெறப்பட்டது. சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்தில் வைத்துதான் கையெழுத்து வாங்கி இருப்பார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே ஜோடிக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட அறிக்கையில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. அளவுகோல் எடுத்துச்

சென்று என் முன்னிலையில் போலீசார் அளந்து கைபற்றவில்லை என்றால் சரியல்ல.

9. எந்த அளவுகோலில் அளந்தார்கள் என்று விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் சீல் வைத்து எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.கவரில் வைத்து கைப்பற்றினார்கள். அரக்கு வைத்து கட்டி சீல் வைத்தார்கள் என்றால் ஆம், சீல் வைத்தார்கள். அந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி சொல்லவில்லை. என்ன, என்ன ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10. அரசு ஊழியர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அளவுகோலில் அளந்ததில் முதலில் எது அளந்தார்கள், 2–வது எது அளந்தார்கள் என்றால் முதலில் கத்தியின் முழு நீளத்தை அளந்தார்கள், அதன் பிறகு மர கைப்பிடியின் அளவை அளந்தார்கள், அதன் பிறகு பூணின் அளவை அளந்தார்கள். நான் கையெழுத்திட்ட அத்தாட்சியில் கிராம நிர்வாக அலுவலர் என்று தான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்தெந்த இடத்தில் கையெழுத்து போட்டார் என்றால் கடைசி பக்கத்தில் போட்டார். உண்மையாக வாங்கி இருந்தால் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து போடுவார் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்படவில்லை என்றும், எங்கள் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. உண்மையாக போட்டு இருந்தால் அலுவலக முத்திரை பதிக்கப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும் போலீசார் ஜோடித்த ஆவணத்தில் போட்டுக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஒரு நபரை பல இடங்களில் வெட்டி குத்தி கொலை செய்யும்போது அந்த கத்தி முழுவதும் ரத்தம் பரவி இருக்கும் என்றால் கத்தியில் ரத்தம் முழுவதுமாக பரவி உள்ளது என சாட்சி தெரிவிக்கிறார். ஜோடிக்கப்பட்ட வழக்கு என்பதால் ரத்தம் கத்தியில் தடவப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. வழக்குக்காக கத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. கொலை செய்திருந்தால் கத்தி முழுவதும் ரத்தம் படிந்து இருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4–ம் எதிரி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசாருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றும், , என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசாருக்கு ஆதரவான கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

3–ம் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக கூறுவதும் பொய் என்றும் அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. 3–ம் எதிரியிடமும் காவல் நிலையத்தில் வைத்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. பொதுவாக எதிரி கைது இடத்தில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே கைது செய்யப்பட்ட எதிரியை என் முன்னிலையில் வாக்குமூலம் வாங்கியதாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், 3–ம் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:24:20 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.